## மிக அவசரம்

# கழக வேட்பாளர்கள் கவனத்திற்கு...!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களும் - வெற்றி வாய்ப்பை இழந்த கழக வேட்பாளர்கள் அனைவரும், தங்கள் தொகுதி தேர்தல் செலவு கணக்கினை தேர்தல் முடிவு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள், அதாவது 2-6-2026ஆம் தேதிக்குள் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்து அதற்கான சான்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**அவ்வாறு ஒப்படைக்கத் தவறுபவர், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி அடுத்த தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பினை இழக்க நேரிடும் என்பதையும் - அப்படி செலவு கணக்கு தாக்கல் செய்த விவரத்தை தலைமைக் கழகத்திற்கு தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 08-05-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.


## மேற்கு வங்கத் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக

# உச்ச நீதிமன்றத்தை நாட திரிணாமுல் காங்கிரஸ் முடிவு!

## மம்தா பானர்ஜி அறிவிப்பு!



கொல்கத்தா, மே 9 -

மேற்கு வங்க தேர்தல் முடிவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தை நாட திரிணாமுல் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. மேற்குவங்க முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்த மம்தா பானர்ஜி, "அவர்கள் என்னை பதவிநீக்கம் செய்து குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தட்டும் என்றும் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு செய்து தேர்தலை பாஜக கொள்ளையடித்துவிட்டதாக குற்றம் சாட்டி உச்ச நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் கூறியுள்ளார். .

பாஜக மற்றும் இந்திய தேர்தல் ஆணையம் இணைந்து தேர்தலில் முறைகேடு (Rigging) செய்ததாக மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகளை எதிர்த்து உச்சநீதி மன்றத்தை நாடப்போவதாகவும், தானும் தனது அமைச்சரவை சகா சந்திரிமா பட்டாச்சார்யாவும் வழக்கறிஞர்களாக மீண்டும் பணியாற்றி இந்த வழக்கை நேரில் நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணும் முறையில் முறைகேடுகள் நடந்ததாகவும், குறிப்பாக 100க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பாஜக வெற்றியை "திருடியுள்ளதாகவும்" மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

மக்களின் தீர்ப்பால் தான் தோற்கவில்லை என்றும், ஒரு சதித் திட்டத்தாலேயே தனது கட்சி தோற்கடிக்கப் பட்டதாகவும் கூறி, முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய அவர் மறுத்துவிட்டார்.

இதற்கிடையில், மேற்கு வங்க தலைமை தேர்தல் அதிகாரி மாநில ஆளுநரிடம் தேர்தல் முடிவு களுக்கான அரசிதழ் அறிவிப்பைச் சமர்ப்பித்துள்ளார். இதன் மூலம் மாநிலத்தில் பாஜக புதிய அரசை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, வாக்கு எண்ணும் பணியில் மத்திய அரசு ஊழியர்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக திரிணாமுல் காங்கிரஸ் தொடர்ந்த வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது குறிப்பிடத் தக்கது.

## + 2 பொதுத்தேர்வு முடிவுகள்!

# தமிழ்நாட்டில் சென்ற ஆண்டை விட மாணவ - மாணவிகள் தேர்ச்சி அதிகம்!

## 7,53,694 பேர் தேர்ச்சி! ஈரோடு மாவட்டம் முதலிடம்!

சென்னை, மே 9 -

தமிழ்நாட்டில் +2 பொதுத்தேர்வில் 95 புள்ளி 20 சதவீதம் பேர் தேர்ச்சியடைந்துள்ளனர். மாணவர்களை காட்டிலும் மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ப்ளஸ் டூ பொதுத் தேர்வினை, தமிழ்நாடு முழுவதும் 4 லட்சத்து 18 ஆயிரத்து 724 மாணவியர்களும், 3 லட்சத்து 72 ஆயிரத்து 930 மாணவர்களும் என மொத்தமாக 7 லட்சத்து 91 ஆயிரத்து 654 பேர் எழுதி இருந்தனர். இந்த நிலையில் ப்ளஸ் டூ பொதுத்தேர்வு முடிவுகளை பள்ளிக்கல்வித்துறை நேற்று வெளியிட்டது.

### மாணவிகளே அதிகம் தேர்ச்சி!

அதில், தேர்வு எழுதியவர்களில் 7 லட்சத்து 53 ஆயிரத்து 694 பேர் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தேர்ச்சி விகிதம் 95 புள்ளி பூஜ்ஜியம் மூன்றாக இருந்த நிலையில், நடப்பாண்டு தேர்ச்சி விகிதம் பூஜ்ஜியம் புள்ளி ஒன்று ஏழு சதவீதம் அதிகரித்து 95 புள்ளி இரண்டு பூஜ்ஜியமாக உள்ளது. வழக்கம்போல், இந்த ஆண்டும் மாணவர்களை விட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவியர் 4 லட்சத்து 6 ஆயிரத்து 167 பேர் தேர்ச்சி பெற்ற நிலையில், 3 லட்சத்து 47 ஆயிரத்து 527 மாணவர்களே தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்களை விட 3.8 சதவீத மாணவியர் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### மே 13 முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்!

தற்காலிக மதிப்பெண் சான்றிதழை மாணவ, மாணவிகள் வரும் 13ம் தேதி முதல் பெற்றுக் கொள்ளலாம் என பள்ளி கல்வித்துறை தெரிவித்துள்ளது. மேலும் விடைத்தாள் நகல்களைப் பெற வரும் 12ம் தேதி முதல் 16ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப்ளஸ் டூ துணைத் தேர்வு வரும் ஜூன் 29ம் தேதி முதல் ஜூலை 7ம் தேதி வரை நடைபெறும் என்றும், 11ம் வகுப்பிற்கான துணைத் தேர்வு ஜூலை 8ம் தேதி முதல் 16ம் தேதி வரை நடைபெறும் என்றும் குறிப்பிட்டுள்ள பள்ளிக்கல்வித் துறை, துணைத் தேர்வினை எழுத விரும்புவோர் வரும் 18ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளது.

மேலும், மறுகூட்டலுக்கு ஜூன் 5ம் தேதி முதல் 8ம் தேதி வரை மாணவ, மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரோடு மாவட்டம் முதலிடம்!

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிக தேர்ச்சிப் பெற்ற அரசுப் பள்ளிகளில், ஈரோடு மாவட்டம் தமிழ்நாட்டில் முதலிடம் பிடித்துள்ளது.

+ 2 பொதுத்தேர்வில் அதிக தேர்ச்சிப் பெற்ற அரசுப் பள்ளிகளில் ஈரோடு, சிவகங்கை, திருச்சி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் மாநில அளவில் முதல் ஐந்து இடங்களை பிடித்துள்ளன. பிளஸ் 2 பொதுத்தேர்வில் அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தில் 98.24 சதவீதத்துடன் ஈரோடு மாவட்டம் தமிழ்நாட்டில் முதலிடத்தை பிடித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம் 96.97 சதவீத தேர்ச்சியுடன் இரண்டாமிடத்தையும், திருச்சி மாவட்டம் 96.55 சதவீத தேர்ச்சியுடன் மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளன. தென்காசி மாவட்டம் 96.15 சதவீத தேர்ச்சியுடன் நான்காமிடத்தையும் கன்னியாகுமரி மாவட்டம் 96.12 சதவீத தேர்ச்சியுடன் ஐந்தாமிடத்தையும் பிடித்துள்ளன.

### கணினி அறிவியல் பாடத்தில் 7 ஆயிரம் பேர் 100-க்கு 100!

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிகபட்சமாக கணினி அறிவியல் பாடத்தில் சுமார் 7 ஆயிரம் மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிகபட்சமாக கணினி அறிவியல் பாடத்தில் 6 ஆயிரத்து 945 மாணவர்களும் குறைந்தபட்சமாக விலங்கியல் பாடத்தில் 18 மாணவர்களும் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர். தமிழ்ப் பாடத்தில் 83 பேரும் ஆங்கிலத்தில் 21 பேரும், இயற்பியல் பாடத்தில் 105 பேரும், வேதியியல் பாடத்தில் 632 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர். உயிரியல் பாடத்தில் 784 பேரும் கணிதப் பாடத்தில் 732 பேரும் தாவரவியலில் 31 பேரும் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

வணிகவியலில் 683 பேரும் கணக்குப் பதிவியலில் 1,946 பேரும் பொருளியலில் 440 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

வரலாறு பாடத்தில் 282 பேரும் கணினிப் பயன்பாடுகள் பாடத்தில் 2 ஆயிரத்து 99 பேரும் வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் பாடத்தில் 463 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

இவற்றில் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் 16 ஆயிரத்து 24 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

அதேபோல், அரசுப் பள்ளி மாணவர்களில் ஆயிரத்து 695 பேர் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

### பாடவாரியாக மதிப்பெண் சதவீதம்!

ப்ளஸ் டூ பொதுத் தேர்வில், மாணவ, மாணவிகள் பாடவாரியாக பெற்ற மதிப்பெண்களின் சதவீதத்தை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ள தேர்வு முடிவுகளில், முதன்மைப் பாடங்களான இயற்பியல் பிரிவில் 98 புள்ளி எட்டு ஏழு சதவீதத்தினரும், வேதியியல் பிரிவில் 98 புள்ளி எட்டு இரண்டு சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், உயிரியல் மற்றும் கணிதம் பாடத்தில் தலா சுமார் 99 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளனர். தாவரவியல், விலங்கியல் மற்றும் கணக்குப் பதிவியலில் சுமார் தலா 98 சதவீதத்தினரும், கணினி அறிவியலில் 99 புள்ளி எட்டு நான்கு சதவீதத்தினரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதேபோல் வணிகவியல் மற்றும் வரலாறு பாடத்தில் சுமார் தலா 97 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது. GFX 2 பாடப்பிரிவுகள் வாரியான தேர்ச்சி விகிதத்தில், அறிவியலில் 96 புள்ளி ஒன்பது பூஜ்ஜியம் சதவீதத்தினரும், வணிகவியலில் 92 புள்ளி ஆறு ஏழு சதவீதம் பேரும், கலைப் பிரிவில் 85 புள்ளி ஒன்று ஒன்பது சதவீதம் பேரும், தொழிற்பாடத்தில் 85 புள்ளி ஒன்பது ஏழு சதவீதம் பேரும் தேர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பன்னிரெண்டாம் வகுப்பு

# தேர்ச்சி விகிதம் அதிகரிப்பு - மகிழ்ச்சி அளிக்கிறது!

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!



சென்னை, மே 9-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அளித்த பேட்டி வருமாறு:-

12ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது என அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

மேலும் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகள்.

பி.எம்.ஸ்ரீ. திட்டத்தால் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ஏற்கனவே விளக்கியுள்ளோம்.

புதிதாக யார் ஆட்சி அமைத்தாலும் பி.எம். ஸ்ரீ. திட்டத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது எனவும் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

## ஆந்திராவில் இருந்து

# 500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய முடிவு!

ஹைதராபாத், மே 9-

ஆந்திர மாநிலத்தில் உள்ள கிரீன்கோ (Greenko) நிறுவனத்திடமிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய தமிழக மின்சார வாரியம் (TANGEDCO) முடிவு செய்துள்ளது.

ஆந்திரா மாநிலத்தில் கர்னூலில் கிரீன்கோ நிறுவனத்தின் நீரேற்று மின்நிலையம் உள்ளது.

இந்த வகை மின் நிலையங்களில் மின் உற்பத்திக்கு பயன்படுத்தும் தண்ணீர், மிக அதிக திறன் கொண்ட மோட்டர் பம்புகள் மூலம் மேல் அணைக்கு ஏற்றப்படுகிறது.

மேலும் தேவைப் படும் நேரங்களில் நீரை பயன்படுத்தி மீண்டும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

கிரீன்கோ நிறுவனத்தின் இந்த மின் நிலையம் நாளொன்றுக்கு 9 மணி நேரம் மின்சாரம் வழங்கும் திறன் கொண்டுள்ளது.

மே மாதம் முதல் அடுத்து 4 ஆண்டுக்கு கிரீன்கோ நிறுவனத்திடமிருந்து மின்சாரம் வாங்க தமிழக மின்சார வாரியம் (TANGEDCO) முடிவு செய்துள்ள நிலையில் தமிழக மின்சார ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஒரு மெகாவாட்டுக்கு ஆண்டுக்கு ரூ.1.50 கோடி செலுத்தப்பட உள்ளது. இதன் மூலம் கோடைகால மின் தேவையையும், தொழிற்சாலைகள் மற்றும் நகர்ப்புற மின் தேவையையும் சமாளிக்க முடியும் என மின் வாரிய உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.





தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, காரிமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஜக்கசமுத்திரம், ஜிட்டாண்டஅள்ளி, பிக்கனஅள்ளி, கேத்தனஅள்ளி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் டி.அரியப்பன், காரிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் எம்.வி.டி.கோபால், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பி.என்.சி.மகேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் குட்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

## பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள்!

# 100 சதவீதம் தேர்ச்சி காட்டியுள்ள 2,639 மேல்நிலைப் பள்ளிகள்!

சென்னை, மே 9 -

தமிழகத்தில் கடந்த மார்ச் 2ஆம் தேதி துவங்கி முதல் 26ஆம் தேதி வரை நடைபெற்ற பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த தேர்வில் மாநிலம் முழுவதும் இருந்து சுமார் 8 லட்சம் மாணவ - மாணவிகள் எழுதியிருந்தனர்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த ஏப்ரல் 6 முதல் 20க்குள் முடிக்கப்பட்டு, மதிப்பெண்கள் இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் நிறைவடைந்த நிலையில் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்வில் மொத்தம் 95.2%பேர் தேர்ச்சி பெற்று உள்ளனர்.

வழக்கம் போல் மாணவர்களை விட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ள னர். மாணவிகள் 97 சதவீ தம் பேரும், மாணவர்கள் 93.1 சதவீதம் பேரும் இந்த பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 7,536 மேல்நிலைப் பள்ளிகளில் 2,639 பள்ளிகள் 100% தேர்ச்சியை காட்டி இருக்கின்றன.

இதில் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் அடங்கும். அதே நேரம் 5,170 பள்ளிகள் 95% தேர்ச்சியை காட்டி இருக் கின்றன.

அதேபோல 100% தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 489ஆக உள்ளது. 95% தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,572 ஆகும்.

பள்ளிகள் வகைப்பாடு வாரியான தேர்ச்சி சதவிதம் கீழ் வருமாறு:-

1. அரசுப் பள்ளிகள்- 92.16% தேர்ச்சி
2. அரசு உதவி பெறும் பள்ளிகள் - 96.14% தேர்ச்சி
3. தனியார் சுயநிதிப் பள்ளிகள் - 98.72% தேர்ச்சி
4. இருபாலர் பள்ளிகள் - 95.30% தேர்ச்சி
5. பெண்கள் பள்ளிகள் - 97.08% தேர்ச்சி
6. ஆண்கள் பள்ளிகள் - 90.49% தேர்ச்சி

பெண்கள் பள்ளிகள், ஆண்கள் பள்ளிகளை விட 6.59% சதவீதம் கூடுதலாகவும், இருபாலர் பயிலும் பள்ளிகள் ஆண்கள் பள்ளிகளை விட 4.81% சதவீதம் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூரில் வன்முறை! வீடுகளுக்கு தீ வைப்பு!

இம்பால், மே 9 -

மணிப்பூரில் காம்ஜோங் மாவட்டத்தில் காசோம் குல்லன் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட நம் லீ, வாங்லீ மற்றும் சோரோ ஆகிய தாங்க்குல் நாகா கிராமங்கள் இந்தியா-மியான்மர் சர்வதேச எல்லையில் இருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தொலைவிலேயே அமைந்துள்ளன.

இந்நிலையில் இந்த கிராமங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆயுதங்களுடன் வந்த தீவிரவாதிகள் வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர். வீடுகளில் இருந்தவர்களை தப்பியோடும்படியும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் வீடுகளில் இருந்தவர்கள் அலறியடித்துக்கொண்டு வெளியேறி அருகில் இந்த காடுகளில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த தாக்குதலில் நம்லீ கிராமத்தில் இரண்டு வீடுகள், வாங் லீ கிராமத்தில் 4 வீடுகள், சோரோ கிராமத்தில் ஒரு சர்ச் உட்பட ஏராளமான வீடுகள் தீயில் எரிந்து நாசமாயின.

இதில் மூதாட்டி ஒருவர் மட்டும் காயமடைந்துள்ளார்.